# கனடா-காரை கலாசார மன்றம்

## தமிழ் மொழித் திறன் போட்டி – 2023

### பேச்சு – உயர் பிரிவு – 7ம் 8ஆம் வகுப்பு மாணவர்கள்

## ஒழுக்கம் உயர்வளிக்கும்

**"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்**
**உயிரினும் ஓம்பப்படும்"**

என்பது வள்ளுவன் திருவாக்காகும். ஒழுக்கம் என்பது ஒருவனது வாழ்வின் உயர்வு, வெற்றி, தோல்வி ஆகியவனவற்றை நிர்ணயிக்கும் சக்தியாகும். மரம் கனி தரும். பசு பால் தரும். ஒழுக்கம் விழுப்பம் தரும். எண்ணத்தினால், சொல்லால், செயலால், ஒருமித்து நல்வழியில் செயல்படவேண்டும். உண்மை பேசுதல், தெய்வத்தை நம்புதல், பெற்றோரைப் பேணுதல், பெரியோரை மதித்தல், ஆசிரியருக்குப் பணிதல், இன்சொல் பேசுதல், பிற உயிர்களிடத்து கருணை காட்டுதல் போன்றன நற்செயல்களாகும். பொய் பேசுதல், களவு எடுத்தல், கொலை செய்தல், மது அருந்துதல் சூதாடுதல் போன்றன தீய செயல்களாகும். இவற்றினை எச்சந்தர்ப்பத்திலாவது நாடக் கூடாது. படிப்பால், பட்டத்தால், பதவியால், பணத்தால் ஒருவன் உயர்வடைய முடியாது. ஒழுக்கம் ஒன்றினால் தான் மேன்மையடைய முடியும்.

ஒழுக்கத்தை இழந்தவர்களை பெற்ற தாயும் விரும்ப மாட்டாள். எல்லோராலும் தீயவர்கள் என இகழப்படுவார்கள். வேண்டாத பழிச் சொல்லுக்கு ஆளாக வேண்டி வரும். இதனை வள்ளுவர் பெருமான்

**"நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்**
**என்றும் இடும்பை தரும்"** என்று கூறியுள்ளார்.

தீயொழுக்கம் என்றும் தீமையே தரும் என்பதை மறந்து விடக்கூடாது. நல்ல சகவாசமே நன்மை தரும். கெட்டவர் சகவாசம் கேடு தரும். நாம் நல்லவருடன் சேர்ந்து பழகினால் நல்லொழுக்கம் தானாகவே வரும். பணம் போனால் தேடிக்கொள்ளலாம். உடல் நலம் இழந்தால் சிகிச்சை மூலம் சரிசெய்து கொள்ளலாம். ஆனால் ஒழுக்கத்தை இழந்தால் எல்லாவற்றையும் இழந்ததற்குச் சமனாகும். மீளவும் ஈடுசெய்ய முடியாது.

மாணவர்களாகிய நாங்கள் ஒழுக்கம் உயர்வளிக்கும் என்பதை தாரக மந்திரமாகக் கொண்டு நாம் என்றும் இன்பமாக வாழ்வோமாக.